In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.24 |
| Name: Chandrakumar | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 22-07-2025.

**(A1 produced on V.C. A2 died. A3 to 9 absent.petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.07.2023 ம் தேதி மேற்படி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது நிலைய கு.எண்.447/2023 u/s 302 IPC வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் சித்திக் அவர்களிடமிருந்து கடவுச்சீட்டு, துரித முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரை 21.07.2023 ம் தேதி அதிகாலை 02.30 மணியளவில் பெற்று நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களிடம் அதிகாலை 3.30 மணியளவில் ஒப்படைத்தேன். மற்ற நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் ஒப்படைத்தேன். நிலையம் சென்று அறிக்கை செய்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்திலிருந்து நீதிமன்ற நீதிபதிகள் குடியிருப்பு சுமார் 2.1/2 கி.மீ. இருக்கும் என்றால் சரிதான். 20.07.2023 ம் தேதியன்று இரவு 11 மணிக்குபோடப்பட்ட முதல் தகவல் அறிக்கையை மறுநாள் அதிகாலை 3.30 மணிக்குத்தான் நீதித்துறை நடுவர் அவர்களிடம் சென்று சேர்ந்துள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து மேற்படி

குடியிருப்புக்கு ½ மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். நான் நீதிபதி குடியிருப்புக்கு சென்று காத்திருந்து கொடுத்துவிட்டு வந்தேன். மேற்படி காலதாமதத்திற்கான தாமதத்தை ஆய்வாளரது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.07.22 15:13:31 +0530

Principal District Judge,
Dindigul.